www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

## வரலாறு

நேரம் : 3.00 மணி    மதிப்பெண்கள் : 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-    20×1=20

1) எழுத்துக்கள் அறிமுகமாவதற்கு முந்தையக் காலச் கட்டம் ______ எனப்படுகிறது
அ) வரலாற்றுக்கு முந்தைய காலம்    ஆ) வரலாற்றுக் காலம்
இ) பழங்கற்காலம்    ஈ) புதிய கற்காலம்

2) ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ______ இருந்தது
அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல் இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்

3) வேதப் பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர்
அ) பிராமணங்கள்    ஆ) சம்ஹிதைகள்    இ) ஆரண்யகங்கள்    ஈ) உபநிடதங்கள்

4) ஆதிச்சநல்லூர் ______ மாவட்டத்தில் அமைந்துள்ளது
அ) கோயம்புத்தூர்    ஆ) திருநெல்வேலி    இ) தூத்துக்குடி    ஆ) வேலூர்

5) புத்தர் தனது முதல் போதனையை ______ இல் நிகழ்த்தினார்
அ) சாஞ்சி    ஆ) வாரணாசி    இ) சாரநாத்    ஈ) லும்பினி

6) பகவதிசூத்திரம் ஒரு ______ நூலாகும்
அ) பௌத்தம்    ஆ) சமணம்    இ) ஆசீவகம்    ஈ) வேதம்

7) அசோகர தூண்களில் உள்ள பிராமி எழுத்துக்களுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ______
அ) தாமஸ் சாண்டர்ஸ்    ஆ) ஜேம்ஸ் பிரின்செப்    இ) சர்ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

8) ______ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்
அ) அர்த்தசாஸ்திரம்    ஆ) இண்டிகா    இ) ராஜதரங்கிணி    ஈ) முத்ராராட்சசம்

9) கரிகாலன் ______ மகனாவார்.
அ) செங்கண்ணன்    ஆ) கடுங்கோ    இ) இளஞ்சேட்சென்னி    ஈ) அதியமான்

10) ______ ராஜசூய யாகத்தை நடத்தினார்
அ) பெருநற்கிள்ளி    ஆ) முதுகுடுமிப்பெருவழுதி    இ) சிமுகா    ஈ) அதியமான்

11) அலெக்சாண்டரின் கிரேக்க தளபதிகளுள் ஒருவர்
அ) செலியுகஸ் நிகேடர்    ஆ) ஆண்டிகோனஸ்    இ) அண்டியோகஸ்    ஈ) டெமெட்ரியஸ்

12) ______ பகுதியில் ரோமானிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.
அ) அரிக்கமேடு    ஆ) ஆதிச்சநல்லூர்    இ) புகார்    ஈ) பல்லாவரம்

13) பொருத்துக.

| எழுதியவர் | | இலக்கியப்படைப்பு |
|---|---|---|
| i) தன்வந்திரி | - | 1. சூரிய சித்தாந்தா |
| ii) வராஹமிகிரா | - | 2. அமரகோஷா |
| iii) ஆர்யபட்டர் | - | 3. பிருஹத்சம்ஹிதா |
| iv) அமரசிம்மா | - | 4. ஆயுர்வேதா |

அ) 4, 3, 1, 2    ஆ) 4, 1, 2, 3    இ) 4, 2, 1, 3    ஈ) 4, 3, 2, 1

14) ______ க்குக் கவிராஜா என்ற பட்டம் அளிக்கப்பட்டது
அ) முதலாம் சந்திரகுப்தர்    ஆ) இரண்டாம் சந்திரகுப்தர்
இ) சமுத்திரகுப்தர்    ஈ) ஸ்ரீ குப்தர்

15) ______ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
அ) குந்தலா    ஆ) பானு    இ) அவந்தி    ஈ) சர்வாகதா

16) கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
அ) ஹர்ஷசரிதம்    ஆ) பிரியதர்சிகா    இ) அர்த்தசாஸ்திரா    ஈ) விக்ரம ஊர்வசியம்

17) அயல்நாட்டு வணிகர்கள் ______ என்று அறியப்பட்டனர்.
அ) பட்டணசாமி    ஆ) நானாதேசி    இ) விதேசி    ஈ) தேசி

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

18) மம்லுக் என்ற பெயர் ஒரு ______ க்கான அரபுத் தகுதி சுட்டாகும்
அ) அடிமை ஆ) அரசர் இ) இராணி ஈ) படைவீரர்

19) ______ ஒரு கலத்துக்குச் சமம்
அ) 28 கி.கி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

20) ______ பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.
அ) மதுரை ஆ) காயல்பட்டிணம் இ) கொற்கை ஈ) புகார்

பகுதி - II

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 7×2=14

21) வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?
22) வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
23) மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
24) ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய அம்சங்கள் யாவை?
25) பண்டமாற்று முறையை விளக்குக.
26) பின்வருவன குறித்து ஒரு பட்டிலைத் தயாரிக்கவும்.
அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்
ஆ) ரோமிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்
27) ஸ்கந்தகுப்தர் வரையிலான குப்த அரசர்களின் பட்டியலைக் காலவரிசைப்படி எழுதுக.
28) ஹர்ஷப்பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை?
29) ஐஹோல் கல்வெட்டு குறித்து சிறுகுறிப்பு வரைக.
30) கஜினி மாமுது ஆதரித்த அறிஞர்கள்.

பகுதி - III

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 7×3=21

31) ரிக்வேதகால சமூகப் பிரிவுகளைக் கோடிட்டு காட்டுக.
32) காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பை எழுதுக.
33) இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.
34) சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் பற்றி எழுதுக.
35) பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.
36) குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகளைக் கூறுக.
37) ஹர்ஷருடைய குற்றவியல் நீதித்துறையின் முக்கியத்துவம்?
38) புகழ்பெற்ற சைவ மூவர்கள் பற்றி எழுதுக.
39) இந்தியாவில் கஜினி மாமூதின் இராணுவத் தாக்குதல்களுக்கான காரணங்கள் என்னென்ன?
40) சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் என்னென்ன?

பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக:- 7×5=35

41) அ) சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது? (அல்லது)
ஆ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
42) அ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி? (அல்லது)
ஆ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றி கூறுக.
43) அ) கலைக்கும், இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும். (அல்லது)
ஆ) குப்தர்காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் - விவரி?
44) அ) ஹர்ஷரின் சமயக்கொள்கை பற்றி விளக்கம் தருக. (அல்லது)
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.
45) அ) கஜினி மாமுதுவையும், கோரி முகமதுவையும் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் காட்டுக. (அல்லது)
ஆ) சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்க.
46) இந்திய வரைபடத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள மகாஜனப் பதங்களை குறிக்கவும்.
1) குரு 2) பாஞ்சாலம் 3) காசி 4) மகதம் 5) காம்போஜம்
47) குப்தர்களின் ஆட்சி குறித்த முக்கியமான ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593